★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 556[illegible]

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 14உ புதன் (27—6—56) ★ ★ வெளியூர்: ஆனி 15உ வியாழன் (28—6—56) [இதழ் 11

வாக்காளர்கள் பட்டியல் [illegible] காலம் நீடிப்பு

சென்னை, ஜூன் 26—

சென்னை சட்டசபை தொகுதிகள் சிலவற்றின் வாக்காளர் பட்டியல்கள் சம்பந்தமான ஆட்சேபங்கள், கோரிக்கைகள் ஆகியவற்றைத் தெரிவிப்பதற்கான காலத்தைத் தேர்தல் குழு நீடித்திருக்கிறது.

அறந்தாங்கி, டி. பாலூர், ஜெயங்கொண்டான், அரியலூர் ஆகிய தொகுதிகளில், வாக்காளர்கள், ஆட்சேபணைகளையும், திருத்தம் சம்பந்தமான கோரிக்கைகளையும் அனுப்பலாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

'திராவிட நாடு'—வினோபா கருத்து

காங்கிரசுக்கு இனிப்புப் பண்டம்

நான் அதிர்ச்சி அடையவுமில்லை; ஏமாற்றமும் இல்லை

'சிறு நாடு' என்ற காரணம் பொருளற்றது

அண்ணா விளக்கம்

'திராவிட நாடு' திட்டம் குறித்து வினோபா ஆவலுடன் பல தகவல்கள் கேட்டதும், நான் அவருடன் அது குறித்து உரையாடியதும் அனைவரும் அறிவர்.

'சிறிய நாடுகள் பெரிய நாடுகளுக்கு இரையாகிவிடாதா?'—என்று என்னை வினோபா கேட்டது தவிர, வேறு எதிர்ப்புக்கான காரணம் ஏதும் பேசவில்லை; அவர் கேட்ட அந்தக் கேள்விக்கும் நான் பதில் அளித்தேன்.

'சுதந்திரத் திராவிட நாடு கூடாது'—என்று, வினோபா கூறுவதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

ஆனால், ஆந்திரம், தமிழகம் போன்ற மாநிலங்களுக்கு முழு மாகாண சுயாட்சி அளித்திட வேண்டும் என்றும், அதனை டில்லி தர இசையும் என்றும் வினோபா கூறியதாகச் 'செய்தி' காணப்படுகிறது.

இயல்பாகவே, நான் அவரிடம் பேசிவிட்டு வந்ததால், வினோபா, திராவிடத் தனி நாட்டுக்கு ஆதரவு காட்டுகிறாரோ என்ற சந்தேகமும் அச்சமும் காங்கிரஸ் வட்டாரத்திலே எழுந்திருக்கக் கூடும்.

அதைப் போக்கவேண்டி, வினோபா, இந்தச் செய்தியைக் கூறியிருந்திருக்கக்கூடும்.

சிறிதளவு பேசியதன் மூலம், 'திராவிட நாடு' பிரச்சினையை வினோபா ஆதரிக்கும்படிச் செய்துவிட, என்னால் மட்டுமல்ல—யாராலும் ஆகாது.

எனவே, வினோபா, திராவிடத் தனி நாடு கோரிக்கையை ஆதரிக்கவில்லை என்ற செய்தி எனக்கு அதிர்ச்சியையோ, ஏமாற்றத்தையோ அளிக்கவில்லை.

எனினும், 'சிறு நாடு' என்ற காரணம் காட்டி, பிரச்சினையை எதிர்ப்பதானால், இதனினும் சிறு நாடுகள் பன்னெடுங்காலமாகச் சுதந்திர நாடுகளாகப் பாங்குடன் வாழ்ந்து வருவதைக் காட்டுவதுடன், 'சிறு நாடு' என்று, 'திராவிட நாடு' கருதப்படத்தக்க அளவினதல்ல என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஆந்திரம், கேரளம், தமிழகம், கருநாடகம் எனும் நான்கு மொழிவழி அரசுகளும் கூட்டாட்சித் திட்டமான 'திராவிட நாடு' அமைத்துக் கொண்டு, வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து விடுபடவேண்டும் என்பதுதான் நமது திட்டம்.

இந்தக் கூட்டாட்சி, சிறியதுமல்ல; 'தன்னாட்சிக்கு ஏற்ற தகுதி படைத்ததல்ல' என்றும் எவரும் கூறிவிட முடியாது.

போர்ச்சுகலும் ஸ்பெயினும், பிரான்சும் ஜெர்மனியும், சுவிட்சர்லாந்தும் பெல்ஜியமும், நார்வேயும் ஸ்வீடனும், கிரீசும் இத்தாலியும், அல்பேனியாவும் இஸ்ரேலும், தனி நாடுகள்—'திராவிட நாடு' இவைகளைக் காட்டிலும் பெரிய அளவு!

தமிழகத்தின் அளவுகூட இல்லாத நாடுகள் பல, தனிக் கொடி பறக்கவிட்டுத் தன்னாட்சி நடத்தித்தான் வருகின்றன.

இந்தியப் பேரரசின் பிடியிலிருக்கும் தமிழகம் தத்தளிக்கிறது பல்வேறு வழிகளில்; ஆனால், தனி நாடாக உள்ள பல சிறு நாடுகள், சீருடன் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றன!

போர் நடத்தியேனும் 'சுதந்திரம்' பெற வேண்டும் என்று துணிந்து இறங்கியுள்ள அல்ஜீரியா, திராவிட நாட்டைவிட அளவிலும் சிறியதுதான்—வளத்திலும் அவ்விதமே!

எனவே, 'திராவிட நாடு' சிறிய நாடு என்று கூறுவதில் பொருள் இல்லை; 'சிறிய நாடுகள் சுதந்திர நாடுகளாக இருக்கவே கூடாது' என்று எந்த அரசியல் 'தர்மமும்' கட்டளையிடவுமில்லை; வரலாறும், 'சிறு நாடுகள் அழிந்து போகும்' என்பதை எடுத்துக்காட்டும் பாட புத்தகமாகவும் இல்லை.

என்னுடன் பேசியதால், திராவிட நாடு பிரச்சினைக்கு வினோபா ஆதரவு அளித்துவிட்டிருக்கக் கூடும் என்று எண்ணி ஏக்கமுற்ற காங்கிரஸ்காரர்கள், வினோபாவின் கருத்து கண்டு மகிழ்வர்; அவர்களுக்கு அது ஒரு இனிப்புப் பண்டம்! நான், ஆதரவு கிடைத்திடும் என்று எதிர்பார்க்கவில்லை; எனவே, இப்போது ஏமாற்றமுமடையவில்லை.

ஆதரவு—அல்லது எதிர்ப்பு—காட்டும் அளவுக்கு, பிரச்சினையை அலசிப் பார்த்துப் பேச, அந்தச் சந்திப்பு போதுமானதாகவும் அமையவில்லை.

பிரச்சினை பற்றிப் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள வினோபா ஆர்வம் கொண்டிருக்கிறார் என்பது எனக்குப் புரிந்தது; பிரச்சினையில் நான் ஆர்வம் கொண்டிருக்கிறேன்—ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருக்கிறேன் என்பதை அவர் அறிந்துகொண்டிருப்பார் என்று நம்புகிறேன்.

அரசியலாரின் கவனத்தைத் திருப்ப!

சூலைத் திங்கள் 1-ந்தேதி 'கோரிக்கை தினம்'

புதுடில்லி, ஜூன் 26—

அனைத்திந்திய 'ஸ்டேஷன் மாஸ்டர்'கள், துணை 'ஸ்டேஷன் மாஸ்டர்'கள் சங்கம், தங்கள் சங்கத்தின் கோரிக்கைமீது அரசியலாரின் கவனத்தைத் திருப்புவதை நோக்கமாகக்கொண்டு, சூலைத் திங்கள் முதல் நாளன்று கோரிக்கை தினம் கொண்டாடுவதென முடிவெடுத்துள்ளது.

துவக்கச் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்பதும், வேலை உயர்வுக்குப் போதிய வசதிகள் செய்து தரவேண்டுமென்பதும் சங்கத்தின் கோரிக்கைகளாம்.

உண்மையான கடவுள் எங்கே?

'பசியால் வாடுவோருக்கு சேவை புரிவதே பரமனுக்குச் செய்யும் சேவையாகும்'

வினோபா பாவே கருத்து

உழுதமங்கலம், ஜூன் 26—

"கோவிலில் சென்று நீங்கள் வணங்கும் தெய்வம், கண்ணால் காண முடியாதது; உண்மையான கடவுள்—இரத்தமும், சதையும் கொண்ட கடவுள்—உடனடியாகக் கவனிக்க வேண்டிய கடவுள் நம் முன்பே இருக்கிறது,"

என்று, ஆச்சாரியா பாவே கூறியிருக்கிறார்.

"பட்டினியால் வாடும் இலட்சோப இலட்சம் மக்களுக்குச் சேவை செய்வதே கடவுளுக்குச்செய்யும் சேவையாகும்,"

என்று, பாவே, கிராம மக்களிடத்தில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

'விஞ்ஞான வளர்ச்சியை காணாமலிருக்க இயலாது'

அம்பர் சர்க்கா பற்றி தேபர்

பாட்னா, ஜூன் 26—

காங்கிரஸ் தலைவர் தேபர், அம்பர் சர்க்கா, மற்றும் கனரகத் தொழில் பற்றிய சர்ச்சை குறித்துப் பேசுகையில், 'நான் அம்பர் சர்க்காவை ஆதரித்த போதிலும், உலகத்தில் ஏற்பட்டுவரும் விஞ்ஞான வளர்ச்சியை நாம் பார்க்காமலிருக்க முடியாது; இரண்டும் ஏக காலத்தில் வாழவேண்டுவது மிக அவசியமானதாகும்,' என்று குறிப்பிட்டுள்ளார்.

அனைவருக்கும் கிடைக்க வேண்டுமே!

அம்பர் சர்க்காவுக்கு மின்சாரம் வினியோகிப்பது பற்றி வினோபா

இந்தூர், ஜூன் 26—

அம்பர் சர்க்காவை இயக்குவதற்கு மின்சாரம் உபயோகிப்பது பற்றி ஆச்சாரியா வினோபா பாவே மறுப்பு ஏதும் கூறவில்லையாம்; ஆனால், அப்படி மின்சாரம் உபயோகிக்க விரும்புவோர் அனைவருக்கும் அது கிடைக்க வேண்டும் என்றும் பாவே கருத்தறிவித்தாராம்.

இந்தத் தகவலை, மத்திய மந்திரி அஜீத் பிரசாத் ஜெயின் வெளியிட்டிருக்கிறார்.

விலை உயர்வைத் தடுக்கத் திட்டம்

ரூ. 40 கோடி பெறுமானமுள்ள அரிசி விற்பனைக்கு வருகிறது

பெங்களூர், ஜூன் 26—

"இந்தியப் பேரரசின் சேமிப்பிலிருந்து ரூ. 40 கோடி பெறுமானமுள்ள அரிசியை, சூலை மாதம் முதல் துவங்கும் பற்றாக்குறை மாதங்களில் விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளனர்; அரசியலாரின் நடவடிக்கை காரணமாக பகிரங்க 'மார்க்கெட்'டில் அரிசி விலை நியாயமான அளவுக்குக் குறைந்துவிடும்," என்று, மத்திய சர்க்கார் உணவு இலாகா துணையமைச்சர் எம். வி. கிருஷ்ணப்பா தெரிவித்திருக்கிறார்.

பகிரங்க 'மார்க்கெட்'டில் விலை உயர்வைத் தடுக்க சென்ற 14 மாதங்களில் கூட்டுறவு நிறுவனங்கள் முதலியவற்றின் மூலம் அரசினர் ரூ. 40 கோடி மதிப்புள்ள அரிசியை விற்பனை செய்துள்ளதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

பஸ் கட்டண உயர்வை

எதிர்த்துக் கலவரம்!

நால்வர் உயிரிழந்த பின்னர் பஸ் சொந்தக்காரர்கள் பணிவு

ஜோகன்னஸ்பர்க், ஜூன் 26—

ஆப்பிரிக்கர்களில் சிலர் 'பஸ்' கட்டண உயர்வைக் கண்டித்து, கடந்த 4 நாட்களாக ஜோகன்னஸ்பர்க் அருகாமையிலுள்ள முவேட்டன் நகரில் பஸ்களில் எவரும் ஏறாமல் இருந்தனரென்றும், இது சம்பந்தமாக நடைபெற்ற கலவரங்களில் நால்வர் உழிரிழந்தனர் என்றும் கூறப்படுகிறது. 'பஸ்' சொந்தக்காரர்கள் பழையபடி கட்டணத்தைக் குறைத்து விடுவதாக அறிவித்தனர் எனத் தெரியவருகிறது.

புதிய மாநிலங்கள் அமைப்பு: ஒரு திங்கள் ஒத்திவைப்பு

ஜனிடால், ஜூன் 26—

திருத்தி அமைக்கப்பட்ட புதிய மாநிலங்கள் அக்டோபர் திங்கள் முதல் அமுலாவதாக இருந்தவை இப்போது, நவம்பர் முதல்தான் அமுலுக்குவரும் என்று தெரியவருகிறது.

இந்த ஒத்திவைப்புத் தகவலை உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் தெரிவித்திருக்கிறார்.

தேர்தல்கள் இதனால் ஒத்திவைக்கப்படமாட்டாது என்றும் 1957-ம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் திங்கள்களில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தோழர்களே, நீங்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டீர்களா—இல்லையெனில், உடனே பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம்

நம்மை நாமே
தி.மு.க.தின் இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 27—6—'56 புதன்

ஒருமுனையா? பல கட்டமா?

'காமதேனு—இந்த விற்பனை வரி விதிப்பு' என்று கூறி வரி வசூலிக்கும் பொறுப்பிலிருப்போர், கேட்போரிடமிருந்து சுலபத்தில் கையொலி பெற்றிருக்கிறார்கள்.

அந்தப் 'பெருமை'க்குரிய விற்பனை வரி விதிப்பு, இன்று தகராறுக்குரிய விவகாரமாக ஆகியுள்ளது.

விற்பனை வரி விதிப்பு, பல முனைகளிலா? ஒரு முனையிலா?—இதில்தான் தகராறு!

'பல முனைகளில் வரி விதிப்பதினால் இலாபம் கிடைக்கிறது' என்கிறது, சர்க்கார்!

'அந்த முறையினால் எங்களுக்கு நஷ்டமும், தொல்லையும், ஏராளம்; மக்களுக்கும் 'சுமை' அதிகமாகிறது; எனவே, 'பல முனை' ஒழிந்து, 'ஒருமுனை' வரி விதிப்பு வேண்டும் என்கின்றனர், வியாபாரிகள்!

இப்படி தகராறுக்கு இலக்காகியுள்ள இந்த விற்பனை வரி விதிப்பு விவகாரம் குறித்து, தி. மு. கழக 2-வது மாகில மாநாடு, தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

அதன் பின்னர், சர்க்கார் சார்பிலும், வியாபாரிகள் சார்பிலும் இந்தத் தகராறு குறித்துத் தரப்பட்ட 'விளக்கங்கள்' பற்றி இந்தத் திங்கள் முதல் கிழமை இறுதியில் இங்கு எழுதியிருந்தோம்.

பல ஆண்டுகளாகவே தமிழகமெங்கணுமுள்ள வர்த்தகப் பெருமக்கள், தங்கள் தங்கள் சக்திக்கேற்ப ஒருமுனை விற்பனை வரி விதிப்பிற்காகப் போராடி வந்திருக்கிறார்கள்; அதன் தொடர்ச்சியாக, நேற்றைய தினம், சென்னை நகரின் பிரதான வர்த்தகக் கேந்திரம் ஒன்றில் அமைதியான கடையடைப்புச் செய்து, தங்கள் கோரிக்கையை வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்தக் கடையடைப்பு நடைபெறுவதற்கு சில நாட்களுக்கு முன்புதான், சர்க்கார் சுமார் எட்டுப் பொருள்களுக்கு— விற்பனை வரி விதிப்பு ஒரு முனையில் மட்டும் நிகழும் என்று ஒரு அறிவிப்புத் தந்தனர். இன்றோ நாளையோ, அந்த எட்டுப் பொருள்கள் என்ன என்ன என்பவை அதிகாரபூர்வமாக வெளியிடப்படும் என்றாலும், தகவல் சேகரிப்பதில் 'குழப்பு வழி'களை தாராளமாகக் கையாளும் சில பத்திரிகைகளுக்கு அந்த எட்டுப் பொருள்கள் என்ன என்ன என்று தெரிந்து வெளியிடும் 'வசதி' இருந்திருக்கிறது.

சர்க்காரின் இந்த அறிவிப்புக் கண்டு, வியாபாரிகள் ஏமாந்துவிடவில்லை நாம் எதிர்பார்த்து எழுதியிருந்ததைப் போலவே, என்பதை, அறிவிப்பிற்குப் பிறகு சென்னையில் நடைபெற்ற கடையடைப்பு கூறுகிறது.

இப்போது, விற்பனை வரி விதிக்கப்படுகிற எல்லாப் பொருள்கள்மீதும் ஒரே கட்டத்தில் வரி விதிப்பதில் ஏதோ கஷ்டமிருப்பதாக சர்க்கார் சார்பில் விளக்க வந்த மந்திரி மாணிக்கவேலர், 'ஒருமுனையில் விதிக்கும் வரி தவறிவிட்டால், எல்லா முனைகளிலும் தவறி விடுகிறது,' என்று வாதிட்டிருக்கிறார். சர்க்காரின் சம்மந்தப்பட்ட வரி வசூலிக்கும் இலாகா திறமையானதாகவும், நேர்மையானதாகவும் இருப்பின், இந்தக் கூற்றுக்கு இடமிருக்க முடியாது.

'எல்லாப் பொருள்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி விதிப்பதானால், மொத்தமாக வரிகளை எய்ப்பதற்கு இடமேற்படும்' என்று முதல் மந்திரி காமராசர் தரும் விளக்கமும் விவேகம் நிரம்பியதாகக் காணப்படவில்லை.

'இன்ன பொருளுக்கு இன்ன கட்டத்தில், இந்த முறையில் விற்பனை வரி விதிப்பு இருக்கும்' என்று நிர்ணயம் செய்து, சட்டமியற்றிவிட்ட பிறகு, அந்தச் சட்டப்படி வரி வசூலிக்கப்பட முடியாது போய்விடும்' என்று ஒரு முதலமைச்சர் பேசுவது, எப்படி விவேகமானதாக இருக்க முடியும்? 'வரிகொடாமல் ஏமாற்றி விடுவார்கள்' என்று ஒரு சர்க்கார் அஞ்சுவதே, அதன் இறைமைக் குறைவை—ஏமாளித்தனத்தை அல்லவா காட்டுவதாக அமையும்?

ஒருமுனை விற்பனை வரி விதிப்பதில் இன்னின்ன கஷ்டங்கள் உண்டு என்பது தெளிவாக்கப்படுமானால், அந்தக் கஷ்டங்களை அகற்றுவதற்குரிய வழி தேடலாம். அதை விடுத்து, "'ஒருமுனை' என்றால், அது தவறிவிட்டால், மறுமுனையில் முடியாது போய்விடுகிறதே" என்றும், "வரி தராமல் மொத்தமாக ஏமாற்றிவிடுவார்களே" என்று கூறிடுவதும் நியாயமான வாதங்கள் அல்ல! சர்க்காரின் கையாலாகாத்தனத்தையும், திறமைக் குறைவையும் காரணமாகக் காட்டி, வியாபாரிகளும், பொதுமக்களும் பல கட்ட விற்பனை வரித் தொல்லைக்கு ஆளாக வேண்டுமென்பதும் எந்த நியாயத்தின் பாற்பட்டதோ?

'எட்டுப் பொருள்களுக்கு ஒருமுனையில் விற்பனை வரி விதிக்கிறோம் என்று இறங்கி வந்த சர்க்கார், எல்லாப் பொருள்களுக்கும், ஒரு கட்டத்தில் வரி விதிக்க இணங்க வேண்டும்; இன்றேல், நாங்கள் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதைத் தவிர வேறு வழி இல்லை' என்றே வர்த்தக சமூகம் கூறுகிறது.

சர்க்கார் விரைவிலேயே யோசிக்கட்டும்—ஒரு முனையா? பல கட்டமா?—என்பதை!

சர்க்கார் அசட்டையாயிருந்தால், பல கட்ட விற்பனை வரிக்கு இப்போது ஒரு முனையிலிருந்து கிளப்பியிருக்கும் எதிர்ப்பும், கிளர்ச்சியும், பல முனைகளில், பல கட்டங்களில், விரிவாகத் தொடங்கவும் கூடும்.

இலங்கை தமிழரின் எழுச்சி

விடுதலை இயக்கம் காண முடிவு

சுதந்திரத் தனி அரசு காண்பதே இலட்சியம்

'மொழி-கலாச்சாரம் காப்பாற்றப்பட வேறு வழி இல்லை' என பெடரல் கட்சி விளக்கம்

திருகோணமலை, சூன் 25—

இலங்கை தமிழ் பேசும் பகுதிகளுக்கான 'தேசிய விடுதலை இயக்கம்' ஒன்று காண்பதற்கான வழிவகைகள், பெடரல் கட்சியின் தலைமைப்பீடத்தவரால் விவாதிக்கப்பட்டிருக்கின்றன.

'தமிழ்ப் பகுதிகளடங்கிய ஒரு சுதந்திர தமிழ்நாடு அமைப்பது, இலங்கையில் ஒரு பெடரல் யூனியன் சர்க்கார் நிறுவுவது என்பதே இந்த விடுதலை இயக்கத்தின் பணியாக இருக்கும்,' என்று கூட்ட முடிவில் விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

சிங்களம் மட்டுமே ஆட்சிமொழியாகும் என்ற சட்டத்தினால், தமிழ் இனம் இலங்கையில் அழிந்துபடும் என்று பெடரல் கட்சியினர் அஞ்சுவதாலேயே, தமிழ் பேசும் பகுதிகளுக்கு தனி அரசு வேண்டுமெனத் தாங்கள் கோருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம் போன்ற அமைதியான நடவடிக்கைகள் மூலம் இலட்சி யத்தை அடைவது என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாயும் இதுபற்றி கட்சியின் மாநாடு வரும் ஆகஸ்டு 19, 20-ந் தேதிகளில் நடந்து முடிந்தபின்னரே தெளிவு ஏற்படும் என்றும் கட்சியின் பிரச்சாரக் குழுச் செயலாளர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தெரிவித்திருக்கிறார்.

"இந்த விவகாரத்தில் தமிழரின் ஒருமுகமான கருத்தைத் திரட்டி, உலக அபிப்பிராயத்தையும், 'தமிழரின் கோரிக்கை நியாயமானதே' என்று உருவாக்கி இலட்சியத்திற்காகப் போராடத் திட்டமிட்டிருக்கிறோம்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இதற்கிடையில், தமிழ் மக்கள், சிங்கள மொழியை எந்த நிர்ப்பந்தத்திற்காகவும் பயிலக்கூடாது எனவும், சர்க்காருடன் தொடர்பு கொள்ளுவது அத்தனையும் தமிழிலேயே இருக்க வேண்டுமெனவும் கட்சி ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுதந்திரத் தனியரசு அமைப்பதின் மூலமே தமிழ் மக்கள், தங்களின் மொழி, கலாச்சாரம் இவற்றைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்றும் கட்சி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

பெடரல் கட்சி, 1949-ல் நிறுவப்பட்டது; அதுதான் இப்போதைய இலங்கை மக்கள் சபையில், தமிழர்களின் தனிப் பெரும் கட்சியாக விளங்குகிறது. அவ்குள்ள தமிழ் உறுப்பினர்கள் தங்கள் உறுப்பினர் பதவியைத் துறக்க வேண்டும் என்று, தமிழர் காங்கிரஸ் விடுத்துள்ள யோசனையை பெடரல் கட்சி நிராகரித்திருப்பதுடன், அதற்கு இன்னும் காலம் வரவில்லை என்றும் தெரிவித்திருக்கிறது.

அமெரிக்க பள்ளிகளில் இன ஒதுக்கல் ஒழிப்பு

வெற்றிகளையும், எதிர்ப்பையும் குறிப்பிடும் அறிக்கை

'பொதுப் பள்ளிகளில் இன ஒதுக்கல் நிலவுதல் அரசியல் சட்டத்துக்கு முரணானது' என்று, தலைமை நீதி மன்றம் தீர்ப்பளித்து, இப்பொழுது இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. கட்சிச் சார்பு இல்லாததும், உண்மையைக் கண்டு பிடிப்பதுமான 'தென் பாடசாலைச் செய்திகள்' என்னும் நிறுவனம் இன ஒதுக்கல் நிலவிய 17 மாநிலங்களின் முன்னேற்றத்தைப் பரிசீலனை செய்துள்ளது.

'தெற்கிலுள்ள பொதுப் பாடசாலைகளில் இன இணைப்பில் மொத்தத்தில் வெற்றியே ஏற்பட்டுள்ளன; ஆயினும், சில மாநிலங்களில் உறுதியான எதிர்ப்பு இருக்கிறது' என்று அதன் பரிசீலனை அறிக்கை கூறுகிறது!

"தெற்கிலும், இடையிலும் உள்ள 17 மாநிலங்களில் ஏறக்குறைய 540 மாவட்டங்களில் தலைமை நீதிமன்றத்தின் இன ஒதுக்கல் தீர்ப்பின்படி நடவடிக்கைகள் எடுத்தன. பள்ளிக்கூடம் விடுமுறை விட்ட காலத்தில் 2,56,000 நீக்ரோக்கள் இன இணைப்பு ஏற்பட்ட நிலைமையில் இருந்தார்கள்.

இன ஒதுக்கல் நிலவிய தெற்கிலுள்ள கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் முனனேற்றம் ஏற்பட்டிருப்பதாக அந்தப் பரிசீலனை காட்டுகிறது; ஆயினும், சில மாநிலங்களில், நீதி மன்றத்து வழக்குகள் இல்லாமல் இன ஒதுக்கல் ஒழிந்து, இன ஒற்றுமை ஏற்படவில்லை என்றும் அது குறிப்பிடுகிறது.

புதுரகப் புல் விதை விற்பனைக்குத் தயாராம்

கால் நடைக்குச் சிறந்த உணவென்கிறது சர்க்கார்

நாகபுரி, சூன் 24—

கால்நடைகளுக்குச் சிறந்த உணவாகக்கூடிய ஒரு புதுரகப் புல் விதை, மத்தியப் பிரதேசத்தில், விற்பனைக்குத் தயாராயிருப்பதாகவும், இந்தப் புல் கால் நடைகளுக்கு மிகவும் உயர்தர உணவென்றும் சர்க்கார் அறிக்கையொன்று கூறுகிறது.

இதைத் தரிசு நிலங்களில் பாசனமின்றி வளர்க்கலாமாம். ஒரு ஏக்கருக்கு 500 மணங்கு புல் கிடைக்குமென்றும், இந்தப் புல் விதையை ஒரு முறை விதைத்து விட்டால் பிறகு மூன்று ஆண்டுகளுக்கு விதைக்கவேண்டியதில்லை என்றும், மழை பெய்யும்போதுதானாகவே வளரும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

தவளகிரி சிகரத்தை எட்ட முடியவில்லையாம்!

போக்ரா (நேப்பாளம்) சூன் 25—

இமயமலையிலுள்ள 26 975 அடி உயர தவளகிரி சிகரத்தை அர் ஜெண்டைனு குழுவினரால் அடைய முயடிவில்லையாம். குழுவின் தலைவர், அம்முயற்சியில் தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளார். 23,500 அடி வரையில் தான் தங்களால் ஏறமுடிந்ததென்றும், கடும்பனிப் புயல் வீசியதே இதற்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்தாராம்.

தமிழ் இனத்தின் தனித் தன்மையை அழிக்க சூழ்ச்சி!

ஒரே சிங்கள இனத்தை உருவாக்க முயற்சியாம்

பண்டாரநாயகா சர்க்காரின் வெறிப் போக்கு!

தமிழ் பேசும் மக்களை ஒரு தேசிய இனமாகக் காட்டும் பதங்களை பத்திரிகைகள், மற்றும் பிரச்சார சாதனங்கள் உபயோகிப்பதைத் தடுக்க வேண்டும் என்றும், இது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கைகளை எடுக்கலாம் என்றும் ஆளும் கட்சியார் ஆலோசித்து வருகிறார்கள் எனத் தெரிகிறது.

தமிழ்ப் பேசும் மக்களை ஒரு 'இனம்' என்று குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை ரத்துச் செய்யுமாறு தபால்—வானொலி மந்திரி சென்ற வாரத்தில் உத்தரவிட்டார்.

மேற்படி நிகழ்ச்சியை அவர் ஒரு தடவை வானொலியில் கேட்க நேர்ந்தது; அந்த நிகழ்ச்சி பலதடவை ஒலிபரப்பப்படும் என்று முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தது; என்றாலும், தமிழரை ஒரு 'இனம்' என்று அந்த நிகழ்ச்சி குறிப்பிட்டது மந்திரிக்கு ஆத்திரத்தை ஏற்படுத்திவிட்டது; உடனேயே அதை ரத்து செய்யுமாறு அவர் கட்டளை பிறப்பித்தார்.

இலங்கையில் ஒரே மக்களை, ஒரே தேசிய இனத்தை—அதாவது, ஒரே சிங்கள தேசிய இனத்தைக் கட்டி வளர்ப்பதே அரசாங்கத்தின் கொள்கை என்றும், இந்தக் கொள்கைக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய எதுவும் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் மந்திரி மரைக்காயர் தெரிவித்துள்ளார்.

தமிழர்களை ஒரு இனத்தவர் என்று கருதப்படக்கூடிய எதையும் ஒலிபரப்பப்படக்கூடாதென்றும், அந்தக் கருத்துப்பட எதாவது ஒலிபரப்பப்பட்டால் அது சம்பந்தப்பட்ட வானொலி நிலைய அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தபால், ஒலிபரப்பு மந்திரி கண்டிப்பான உத்தரவிட்டுள்ளார்.

மந்திரியின் ஒரு இன அபிப்பிராயத்தை இலங்கை வானொலி நிலையம் விடாப்பிடியாக ஒலிபரப்பும் என்றும், இதற்கான திட்டத்தை யகுக்க நிலைய அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளார்கள் என்றும் கூறப்படுகிறது.

'இலங்கையர் இனம்; சிங்கள இனம்' என்ற இந்த இரண்டு பதங்களும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்படுத்தப்பட்டு ஒலிபரப்பப்படும் என்றும் தெரிகிறது.

தமிழர்களையும், மற்ற இனத்தவர்களை குறிப்பிடுமபோது 'சிறுபான்மை வகுப்பினர்' என்ற பதம் உபயோகிக்கப்படலாம எனவும் சொல்லப்படுகிறது.

மந்திரியின் 'ஒரு இன' உத்தரவை இலங்கை வானெலியின் தமிழ்ப் பகுதி சரியாக நிறைவேற்றுகிறதா என்பதைக் கவனித்து தனக்கு அறிக்கை தருவதற்காக அவர், தனது இலாகாவைச் சேர்ந்த சில அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என்றும் கூறிக்கொள்ளப்படுகிறது.

தமிழ்ப் பேசும் மக்களை ஒரு 'இன'மாக பத்திரிகைகள் எழுதுவதை எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றியும் மந்திரியார் ஆலோசித்து வருகிறார் எனவும் தெரிகிறது.

—கொழும்புவிலிருந்து வெளிவரும் 'சுதந்திரன்'—24-6-56 இதழில் இவ்வாறு தரப்பட்டுள்ளது.

ஸ்டாலின் பற்றி ரஷ்யக் கம்யூனிஸ்டுகள் 'விமர்சனம்'

இத்தாலி நாட்டுக் கம்யூனிஸ்டு தலைவர் கண்டனம்

வியன்னா, ஜூன் 24—

ஸ்டாலின் மதிப்பைக் குறைக்கும் திட்டத்தை அமுல் நடத்த முயற்சி செய்துவரும் இரும்புத் திரைக்கு இருபக்கங்களிலுமுள்ள கம்யூனிஸ்டு கொள்கையாளர்கள், இத்தாலி கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரான பாமிரோ டோஇல்யாட்டி இவ்வாரக் கடைசியில் வெளியிட்டுள்ள சில விந்தையான அறிக்கைகளால் ஆச்சரியமடைந்தனர்.

இத்தாலிய கம்யூனிஸ்டுக் கட்சிப் பத்திரிகையான 'யூனிட்டா'வில் பிரசுரிக்கப்பட்ட நீளமான விளக்கத்தில், பின்வரும் அவசியமான பல துறைகளில் அசாதாரணமான கருத்துக்களை, டொல்லியாட்டி வெளியிட்டுள்ளார் :—

1. கல்ல செய்கைகளுக்கு எல்லாம் ஸ்டாலினைப் போற்றி வந்தது மார்க்சியத்துக்கு மூரண்பட்டதாக இருந்ததுபோலவே, மோசமானதற்கு எல்லாம் ஸ்டாலினை பொறுப்பாளியாகக் கூறுவதும், 'மார்க்சியத்தின் தீர்ப்புக்குப் புறம்பானதாகும்.'

2 ஸ்டாலின் உயிருடன் இருக்கையில் அவருடைய புதிரை எதிர்க்காமல் இருந்தமையால், குருஷ்சேவும் அவருடைய கூட்டாளிகளும் மதிப்பை இழந்து விட்டனர்.

3. 'சோவியத் சமூகம் இதுவரையிலும் ஜனநாயகப் பாதையிலிருந்து விலகி எவ்வாறு இருந்தது—இருக்க முடிந்தது' என்பதை, புதிய சோவியத் தலைவர்கள் கண்டறிய வேண்டும்

4. சோவியத் 'மாதிரி'யை, மற்ற நாடுகள், 'கடமை' எனக் கருதுவது இனிமேல் கூடாது.

5. சோவியத் அல்லாத கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு 'அதிகமான தீர்ப்பு உரிமை' அவசியமாகும்.

இதில் எந்த அளவுக்கு அவ்வாறே ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதும், மாஸ்கோவிலிருந்து வேற்றுமையை குறிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதும் முழுவதும் தெளிவாக இல்லை; டொல்லியாட்டி, கம்யூனிஸ்டுக் கொள்கைகளுக்கு உண்மையாக இருக்கதீவிரமாகமுயற்சிசெய்கிறார்; ஆனால், உண்மை என்னவென்றால், இதுவரையிலும் எல்லா அடிப்படைக் கொள்கை விளக்கங்களுக்கும் மிகப் புனிதமானதும் தவறில்லாததுமான பிறப்பிடமாக இருந்த மாஸ்கோவைப் பற்றிய அடிப்படை கண்டனத்தை அவர்வெளியிடுகிறார்.

டிட்டோ, மாஸ்கோவுக்குச் செல்வதற்கு முன் அவரை டொல்லியாட்டி சந்தித்த பிறகுதான், அவருடைய நீண்ட ஸ்டாலின் எதிர்ப்புக் கட்டுரை வெளியிடப்பட்டது என்பதைப் புறக்கணிக்க முடியாது.

கம்யூனிசத்தின் மிகத் தீவிரமையும், தகுதியும் பெற்ற கொள்கை நிபுணர்களில் ஒருவராகவே டொல்லியாட்டி எப்பொழுதும் கருதப்பட்டு வந்துள்ளார். சோவியத் தலைவர்களைப் பற்றிய சில குறிப்பிட்ட கண்டன குறிப்புகளைப் போல் அவருடைய விமர்சனம் தீவிரமாக இல்லை என்றாலும், அவர் ஒரு புதிய தேசியக் குரலில் பேசுவதுபோல் தென்படுகிறார்.

இரும்புத் திரைக்கு உள்ளும்—புறமும் உள்ள மற்ற கம்யூனிஸ்டு நாடுகளின் பெரும் கவனத்தை டொல்லியாட்டியின் கருத்துக்கள்; தவக்கமும் போக்கமும் எவ்வாறு இருப்பினும் கவரக்கூடுமென்பதை இந்த உண்மைகள் எடுத்துக் காட்டுகின்றன.

கொள்கை காரணமாக சோவியத் கம்யூனிஸ்டு கட்சியை பெரிதும் கண்டிக்கும் முறையில் டொல்லியாட்டி பேசுகிறார் என்றாலும், சார்பு நாடுகளிலுள்ள கொள்கையாளர்கள், வேறு எந்த விஷயம் கண்டிக்கப்பட்டாலும், மாஸ்கோவிலிருந்து இளம்பும் கட்டுக் கொள்கை புனிதமானதாகுமென வற்புறுத்துகின்றனர்.

டொல்லியாட்டியின் கூற்று கவனிக்கப்படவேண்டும். தற்பொழுது ஸ்டாலின் எதிர்ப்புப் பிரச்சாரம் எந்த முறையில் அமைந்திருக்கின்றது என்பது 'விமர்சகர், இரும்புத் திரைக்கு அப்பால் இருக்கிறாரா? அல்லது, வெளியே இருக்கிறார்?' என்பதைப் பெருமளவு பொருத்ததாகும். 'மாஸ்கோவின் கட்டுப்பாடு தெளிவாக இருக்கிறதா? அல்லது மறைமுகமாக இருக்கிறதா?' என்பதே பொருள்!

வடநாட்டுப் பழங்குடி மக்களுக்கு!

புனர்வாழ்வு தர முயற்சி

இராஜஸ்தானில் கோட்டாவுக்கு வடகிழக்கே 95 மைல் தூரத்தில் 'சகபாத்' என்ற புராதன நகரம் இருக்கிறது. அடர்த்தியான காட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள அந்நகரத்தில் 'செக்ரியா' என்னும் தாழ்த்தப்பட்ட குடிமக்கள் வாழ்கின்றனர். அவர்களுக்கு வெளியுலகத் தொடர்பே கிடையாது.

வனவாழ்க்கை வாழ்ந்து வருகிற அம்மக்களுக்கு, வெளியுலகத் தொடர்பு ஏற்படுத்தி புனர்வாழ்வு அளிக்கும் நோக்கத்துடன், இராஸ்தான் சர்க்கார் அவர்களுக்காக 'மாதிரி கிராமங்கள்' ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டத்தை சென்ற பிப்ரவரியில் ஆரம்பித்து வைத்தார்கள். திட்ட ஆரம்பத்தில் சில தொல்லைகள் இருந்தபோதிலும், நாளடைவில் அதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. 'குசால்பூரா' என்ற கிராமத்தில் 49 'செக்ரியா' குடும்பங்களுக்கு ஏற்கனவே நிலங்கள் கொடுக்கப்பட்டுள்ளன; 'சுப்காரா' என்ற கிராமத்தில் 73 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு மானிய உதவியாக ரூ. 350-ம் கொடுக்கப்படுகிறது. இணறுகள் வெட்டுவதற்கும், நிலத்தைப் பண்படுத்துவதற்கும் அவர்களுக்கு மானியங்கள் கிடைக்கும். பாதைகள் அமைப்பதற்கும், குடி தண்ணீர் இணறுகள் வெட்டுவதற்கும், கிராமக் குளங்களைப் பழுது பார்த்துப் புதுப்பிப்பதற்கும் ரூ. 25,000 ஒதுக்கப்பட்டுள்ளன; கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்ய ரூ. 10,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

கிராம அமைப்புத் திட்டத்தில் பள்ளிக்கூடம், மருத்துவ மனை, கிராமப் பொதுச்சாவடி, சிறுவர்களுக்கான ஒரு சிறிய பூங்கா, குடிதண்ணீர் இணறுகள், நீர்தாரைக் குழிகள், சமுதாய நிலையம் ஆகிய எல்லா வசதிகளுக்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

ஓராசிரியர் பள்ளித் திறப்பு விழா

22—6—56 மாலை 5 மணியளவில் குன்னத்தூருக்கு அருகில் உள்ள கருக்குப்பாளையத்தில், மேற்படி பள்ளியை தோழர் கே. என். நடராசன் திறந்து வைத்துப் பேசினர்; தோழர் க. அன்பரசு கல்வியின் இன்றியமையாமையை விளக்கினர்; தோழர் வெ. இராசகோபால் நன்றி நவின்றார்.

செய்திச் சுருள்

★

சென்னை மணி அரசு மாணவர் மன்றம்

"வெசண்முகம்(பிள்ளை) மாணவர் இல்லத்தின் சார்பில் நடைபெறும் 'மணி அரசு மாணவர் மன்றத்'திற்கு 1956—57-ம் ஆண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—தலைவர்: எஸ். ஏ. இராமச்சந்திரன்; செயலாளர்: பி. எம். வேணுகோபால்; பொருளாளர்: என். குருபஞ்சராவ்; நான்கு பேர் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

முதலூர் 'மறுமலர்ச்சி மன்றம்'

22—6—56ல், மன்ற உறுப்பினர் கூட்டம் தோழர் யோ. விக்டர் தலைமையில் நடைபெற்றபோது, மன்றச் செயலாளர்—அ. ஜெயசிங்; பொருளாளர்—யோ. விக்டர்; விளம்பர உறுப்பினர்—சோ. நாக மணி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிலாச் சோறு விழா

சென்னை மாணவர் மன்றத்தினரும், தாய்மார் கழகத்தினரும் சேர்ந்து முழுநிலா நாளாகிய 22—6—56-ல் சின்னஞ்சிறு குழந்தைகளுக்காக பெத்துநாய்க்கன் பேட்டையில், 'நிலாச் சோறு ஆக்கும் விழா'வினை புலவர் மயிலை-சிவ. முத்து தலைமையில் சிறப்பாகக் கொண்டாடினர். ஆடவரும், மகளிரும், சின்னஞ்சிறு குழந்தைகளும் நூற்றுக்கணக்கிலே வந்து குழுமியிருந்தனர். தமிழர்கள் நிலவுக்காலத்தைச் சிறந்த விழாவாகக் கொண்டாடுதலே சிலப்பதிகாரத்திலிருந்து, பழக்க வழக்கங்களிலிருந்தும் பலப்பல எடுத்துக் காட்டுகளோடு தலைவர் தம் முன்னுரையில் கூறினர். புலவர் தணிகை-உலகநாதர் அனைவரையும் வரவேற்றவுடன் சென்னை நகராண்மைக் கழகத் தலைவர் திரு. என். சங்கரன் விழாவைத் துவக்கி வைக்கும் வகையில் மாணவர் மன்றத்தையும், தாய்மார் கழகத்தையும் பாராட்டிப் பேசினர். அவர் தம் வாழ்க்கைத் துணைவியார் மன்றத்திற்கு அன்பளிப்பாக ரூபாய் பத்தினை உதவி, குழந்தைகளுக்கு நிலாச் சோற்றினை அன்புடன் பரிமாறினர்கள். சண்முகானந்த சங்கீதக் கைத்தொழிற் கழகக் குழந்தைகளும், தாய்மார் கழகக் குழந்தைகளும் ஆடல்பாடல்களால் மக்களை மகிழ்வித்தனர். தலைவர் மயிலை-சிவ. முத்து அவர்கள், புலவர் உலகநாதரின் அன்னையாராகிய சுந்தரம் அம்மையார் படத்தைத் திறந்து வைக்கும்முகத்தான் அவர் விருந்தினரைப் போற்றும் உயர்க் குணங்களைச் சிறப்பித்துக் கூறினர். தோழர் அன்புப்பழம்நி நகைச்சுவை ததும்ப கதைகூறி அனைவரையும் மகிழ்வித்தார். தேர்வில் வெற்றிபெற்ற குழந்தைகளுக்குப் பரிசளிக்கும் நிகழ்ச்சியும் அப்போது நிகழ்ந்தது. புலவர் கோ. வில்வபதி நன்றி நவின்றார்.

அன்பளிப்புகள்

அண்ணா அவர்களின் இராமநாதபுர மாவட்ட சுற்றுப் பயணத்தின் போது, இராமநாதபுரம், திருவில்லிபுத்தூர், பரமக்குடி, தளவாய்புரம், சாத்தூர் விருதுநகர் ஆகிய ஊர்களில், 'நம் நாடு' வளர்ச்சிக்காக அன்பளிப்பாகத் தரப்பட்ட ரூ. 15—15—6-ம் மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் மூலம்—வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

* * *

தென்னற்காடுமாவட்டம்சங்கராபுரம் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்களிடம் உலகுடையாம்பட்டு தி. மு. கழகக் கிளை சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தரப்பட்ட ரூ. 1 வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

'மாம்பழ விழா'

23—6—56 மாலை 3½ மணிக்கு சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில், 17, இரத்தின முதலி தெருவில், மயிலை-சிவ. முத்து தலைமையில் கூட்டம் நடைபெற்றது; தலைவர், திருக்குறள் வகுப்பை நடத்தினர்; பின்னர், காரைக்காலம்மையாரைப் பற்றியும், 'மாம்பழ விழா' எனும் தலைப்பைப் பற்றியும் சிறந்த விளக்கம் தந்தார் தோழியர்கள் பார்வதி அம்மையார், ஒளிச்செல்வி, பரமேசுவரி, வெற்றிச்செல்வி, சுந்தராம்பாள், வெற்றிமகள் ஆகியோர் சொற்பொழிவாற்றினர், வல்லை-பாலசுப்பிரமணியம் காரைக்காலம்மையார்தம் குணநலன்களைக் குறித்துப் பேசினர். கூட்டத்தினருக்கு திருமதி சரோஜா-சங்கரன் மாம்பழம் வழங்கினர். தாமரைக் கண்ணியார் நன்றி நவின்றார்.

திருமணங்கள்

24-6-56 காலை 8 மணியளவில் சென்னை—கொடுங்கையூர் பி. எஸ். ஐ. மிஷன் பாடசாலைத் தெரு, 3/33-ம் எண் இல்லத்தில் தோழர் எல். வேலு—தோழியர் முனியம்மாள் திருமணம் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். இதன் பினவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி பொறுப்பாளர்.

* * *

10-6-56 காலை 9 மணியளவில் சென்னை சேப்பாக்கம் அருடிகான் பகதூர் தெருவில், மணமகன் இல்லத்தில் தோழர் என். ஜீவரத்தினம் தலைமையில், தோழர் பி. கே. கோவிந்தன்—தோழியர் இராதா திருமணம் நடைபெற்றது. தோழர்கள் கண்ணதாசன், காஞ்சி-கல்யாணசுந்தரம், சொர்ணம், எம். கே. மணி, கபிலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

* * *

10-6-56 காலை 9 மணிக்கு புளியந்தோப்பு ஜீரோ நகர் எண் 59 இல்லத்தில், தோழர் ஆர். இராமாஞ்சி-தோழியர் எம். சரோஜினி வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் காஞ்சி—கல்யாணசுந்தரம், கே. சுப்பிரமணி, சா. கோ. நாராயணசாமி, கோ. சேசவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பின், கிளைக் கழக வளர்ச்சிக்கு மணமகன் ரூ.1 அன்பளிப்பாகத்தந்தார்.

* * *

21—5—56 காலை 9 மணியளவில் மதுரை மாவட்டம் சிறுகுடி கிராமத்தில் தோழர் இரா. சிவஞானம்—தோழியர் சந்தானலட்சுமி; தோழர் ஆ. சொக்கலிங்கம்—தோழியர் மாகதாம்பாள் திருமணங்கள் தோழர் முரு. சு. முருகையா தலைமையில் நடைபெற்றது. புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், அ. பொன்னம் பலனார் வாழ்த்துரை வழங்கினர்.

* * *

1—6—56 காலை 10-30 மணியளவில் மதுரை மாவட்டம் வடுகப்பட்டியில் தோழர் சித்தனைச் சிற்பி—தோழியர் சுலோசனை; தோழர் திருட்டிணன்—தோழியர் சுகுணை திருமணங்கள் புரட்சிநடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வசனப்பித்தன், அ. பொன்னம்பலனார் வாழ்த்துரை வழங்கினர்.

* * *

27—5—56 காலை 10 மணியளவில், மதுரை திருப்பரங்குன்றம் காடார் சத்திரத்தில் தோழர் எஸ். சங்கரபாண்டியன் தலைமையில், தோழர் டபிள்யு. பி. ஏ. எஸ். பாண்டியன் அவர்கள் பேத்தி தோழியர் ஞானப்பூங்கோதை — டாக்டர் தோழர் எஸ். சௌந்திரபாண்டியன் திருமணம் நடைபெற்றது. தோழர் இ. மு. பெ. விசுவநாதம் பாராட்டுரை வழங்கினர்.

காவியக் கலை அரங்கம் செயற்குழுக் கூட்டம்

24—6—56 மாலை, சென்னை இராயபுரம் 'மலர்' இதழ் அலுவலகத்தில், காவியக் கலை அரங்கச் செயற்குழுக் கூட்டம் தோழர் வி. டி. லாசர் தலைமையில் நடைபெற்றபோது, அரங்கத்திற்கான பணி மனை கட்டுவதற்கான திட்டங்களை முடிவு செய்தும், அதற்குத் நிதி திரட்டியில் தோழர் வே. கபிலன் அவர்களின் 'கிளைக் கோட்டம்' நாடகத்தை நடத்துவதென முடிவு செய்தும், அடுத்த வாரத்தில் அதற்கான தலைக்க விழாவை தோழர் எஸ். எஸ். பி. விங்கம் தலைமையில், நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. தோழர் என். வி. மதிவண்ணன் நன்றி நவின்றார்.

விருதுநகர் வள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

இம்மன்றத்தின் 9-வது விழாவை 24-6-56 காலை 10 மணியளவில், திரு. ச. அம்மையப்பன் தலைமையில் நடைபெற்றது. 'நடவுளுக்கு உருவ வழிபாடு தேவை' என்ற பொருள் பற்றிய சொற்போரில் திருவாளர்கள் வெகாமி நாதன், வீரேசானந்தன், போசு, சங்கரநாராயணன், பாண்டியராசன் சங்கரன் ஆகியோர் கலந்துகொண்டனர். வாக்கெடுப்பில், விவாதத் தீர்மானம் தோற்றது.

திருச்சி வானொலி நிலையம் தமிழுக்கு முதலிடமும், முக்கியத்துவமும் தராமல் இயங்கும் போக்கைத் திருத்திக்கொள்ளவும், இந்த நிலையை மீடிக்கவிடாமல் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசியலாரைக் கேட்டுக் கொள்ளவும் ஒரு தீர்மானம் மிகை வேறியது.

1-7-56-ல் திரு அ. கி. பரந்தாமனார் தலைமையில் 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' என்ற தலைப்பில் சிறப்புக்கூட்டம் நடைபெறும்.

பிறப்பு

குன்னக்காபாளையம் தி. மு. கழகப் பொருளாளர் தோழர் ஆறுமுகம் அவர்களின் துணைவியார் 11—6—56ல் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார்; குழந்தைக்கு 'இராசமாணிக்கம்' என்ற பெயர் சூட்டப்பட்டதன் பினவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

14-6-56 காலை 6 மணியளவில் சென்பகச் சேரியில் தோழர் என். பெட்டப்பா தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர் கே. கோவிந்தராசு அவர்களின் ஆண் மகவுக்கு 'செங்குட்டுவன்' என்றும், தோழர் இராமசாமி அவர்களின் பெண் மகவுக்கு 'பரிமளச் செல்வி' என்றும் தோழியர் சத்தியவாணி முத்து அவர்களால் பெயர் சூட்டப்பட்டதின் பினவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு முறையே ரூ. 2-ம், ரூ. 1-ம் அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொருப்பாளர்.

காதணி விழா

3-6-56 காலை 9 மணிக்குமேல் சென்னை—கோடம்பாக்கம் புனித தெட் இந்தியா காலனி 8-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் குமாரசாமி அவர்களின் குழந்தைகள் புனிதா, தனசேகர், பரிமளா; தோழர் பத்மநாபன் அவர்களின் குழந்தை சங்கர்ஜோதி ஆகியோருக்கு தோழர் கே. விஜயகம் எம். எல். எ. தலைமையில் காதணி விழாவும், தோழியர் அலமேலு அப்பாதுரை அவர்கள் தலைமையில் எழுத்தறிவித்தலும் நடைபெற்றது. தோழர் கா. அப்பாதுரை அவர்கள் வாழ்த்துரை வழங்கினர். இதன் பினவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொருப்பாளர்.

மந்திரி சுப்பிரமணியத்தின் போக்கு!

சர்க்கார் ஊழியர்களின் மனக் கொதிப்பு

கோரிக்கை ஈடேற உண்ணாவிரதம் மேற்கொண்டவர் கைது!

சென்னை, சூன் 26—

கெஜட் பதிவில்லாத சர்க்கார் ஊழியர்களின் நியாயமான சம்பள உயர்வுக் கோரிக்கைகளை ஈடேற்றுவதற்காக—கோரிக்கைக்கு சர்க்காரை இணங்க வைப்பதற்காக ஆர். சவரிமுத்து என்ற ஒரு சர்க்கார் ஊழியர், சாகும்வரை உண்ணாவிரதம் துவங்கினர்.

சர்க்கார் தலைமை அலுவலகம் அமைந்துள்ள கோட்டையில் இருக்கும் கொடி மரத்தின்கீழ் அவர் உண்ணாவிரதத்தைத் தொடங்கினர்.

அத்துமீறி கொடிக் கம்பத்தை ஆக்ரமித்ததாகப் போலீசார் அவரைக் கைது செய்து வழக்குத் தொடர்ந்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

ஒரு பொட்டி ஸ்ரீராமுலுவின் சாவு ஆந்திர மாநிலத்தைப் பெற்றுத் தந்திருப்பதினால், எனது சாவு, சர்க்கார் சக ஊழியர்களுக்கு விமோசனத்தைத் தேடித் தரட்டும்'

என்று, 5-குழந்தைகளுக்குத் தந்தையும், 43-வயதுமான—23 ஆண்டுகள் சர்க்கார் ஊழியராக வினைகிவரும் சவரிமுத்து கூறியுள்ளார் எனத் தெரிகிறது.

சென்னை சர்க்கார், கிராம நல அபிவிருத்தி இலாகாவில் உயர்தரப் பிரிவு குமாஸ்தாவாக அவர் பணி புரிகிறார் என்று தெரிய வருகிறது.

'நேரடி நடவடிக்கை தவிர வேறு வழியில்லை'

இதற்கிடையில், நேற்று முன்தினம் கூடிய சர்க்கார் ஊழியர் சங்க செயற்குழுவினர், பிரதமர் நேரு தங்கள் அதுக் குழுவினரைச் சந்திக்காதது பற்றி விவாதித்துவிட்டு, 'இனி நேரடி நடவடிக்கை தவிர வேறு வழி இல்லை' என்று அறிவித்திருக்கின்றனர்.

'வரும் சூலை மாதம் 2-ந் தேதியன்று மாநிலமெங்கணுமுள்ள சர்க்கார் ஊழியர்கள் சம்பளம் வாங்கக்கூடாது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறபடி, சம்பளம் வாங்க மறுப்பர்' என்றும் செயற்குழுவினர் அறிவித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

வெந்த உள்ளத்தில் வேல் பாய்ச்சுகிறார்!

இதற்கிடையில் மந்திரி சுப்பிரமணியம் சர்க்கார் ஊழியர்களின் வெந்த உள்ளத்தில் வேல் பாய்ச்சுவதுபோல பேசியிருப்பதும், சர்க்கார் ஊழியர்களுக்கு ஆத்திரமூட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

மந்திரி சுப்பிரமணியம் பேசியிருப்பது, போக்கிரித்தனமான ஒன்று—என்றும் சில சர்க்கார் ஊழியர்கள் கருதுகின்றனராம்.

'நேரடி நடவடிக்கை என்று பேசுகிறவரை, என். ஜி. ஓ.-க்களின் கோரிக்கைகளைக் கவனிப்பதற்கில்லை' என்று, அவர் பேசினராம்!

'நேரடி நடவடிக்கையில் ஈடுபடப்போகிறோம் என்று நாங்கள் எப்போது, அறிவித்திருக்கிறோம்? புல்லாண்டுகளாக எங்கள் கோரிக்கைகளை வெளியிட்டு, நியாயம் கோரி கெஞ்சிக் கூத்தாடிப் பார்த்து, அலுத்துப்போன நிலையில்தானே?' என்று அவர்கள், கொதிப்புடன் கேட்கின்றனராம்!

சேத்தியாதோப்புக்கு அண்ணா வருகை

29—6—56 காலை 7 மணியளவில், சிதம்பரம் வட்டம்—சேத்தியா தோப்பு அஞ்சல்—அள்ளூரில், தோழர் கி. வெள்ளப்பிள்ளை—தோழியர் அம்சாயாள் திருமணம் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

அண்ணா அவர்கள், திருமண விழாவிற்குத் தலைமை தாங்குவார்கள்; தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., வாழ்த்துரை வழங்குவார்.

* * *

அன்று மாலை 6 மணியளவில், சேத்தியாதோப்பு தி. மு. கழகச் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., தலைமை தாங்குவார்; அண்ணா அவர்கள் விரிவுரையாற்றுவார்கள்.

கழகக் கூட்டம்

★

கோவிலூர்:
(மதுரை மாவட்டம்)
வள்ளுவர் திடலில்
29—6—56 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா

தலைவர்:
மதுரை—எஸ். மூத்து

பேசுவோர்:
எஸ். எஸ். இராசேந்திரன்
டி. வி. நாராயணசாமி

★

மயூரம்
நகரப் பூங்காவில்
29—6—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
மா. கி. இராமசாமி

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ப. உ. சண்முகம்

சென்னை 47-வது வட்டத் தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

28-6-56 மாலை 7-மணிக்கு, சைதை, கடைத் தெரு, எண் 95 இல்லத்தில், கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

★★★★★-★★★★-★★★★★★★★

கிளைக் கழகச் செயலாளர்களுக்கு:

★

தி. மு. கழக உறுப்பினர் உரிமைச் சீட்டு, 22—6—56 முதல் அந்தந்த கிளைகளுக்குத் தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்டு வருகிறது.

கிளைக் கழகச் செயலாளர்கள், அந்தந்த உறுப்பினர்களுக்கு உரிமைச் சீட்டை உடனடியாக வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

என். வி. நடராசன்

'அறிவகம்', சென்னை-13, 22-6-56 — தலைமைப் பொதுச் செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★-★★-★★

தென் ஆற்காடு மாவட்டத்தில்:

என். வி. நடராசன் சுற்றுப் பயணம்

★

„ 28: அரசம்பட்டு
„ 29: சோழம்பட்டு
„ 30: உலகுடையாம்பட்டு

சர்க்கார் பிடிவாதத்திற்குச் 'சம்மட்டி அடி'

பல கட்ட விற்பனை வரி விதிப்பிற்கு எதிராக சென்னை வியாபாரிகள் கடையடைப்பு

சென்னை, சூன் 27—

உணவு, மற்றும் பண்டங்களுக்கு பலகட்ட விற்பனை வரி விதிப்பை எதிர்த்து நேற்று கொத்தவால்சாவடி, கடைத் தெரு முழுதும் அடைத்துக் கிடந்தது.

இந்தக் கடையடைப்பு, பொதுவாக தமிழக வியாபாரிகள் அனைவரும் பலகட்ட விற்பனை வரி விதிப்பை எதிர்த்து நடத்தி வரும் கிளர்ச்சியின் ஒரு பகுதியேயாகும்.

கொத்தவால்சாவடி நகரத்தின் பிரதான வர்த்தகக் கேந்திரங்களுள் ஒன்று; அங்கு தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான ரூபாய்க்கு வியாபாரம் நடைபெறும்; அரிசி, மிளகாய், காய்கறி, பலசரக்கு, பழ வகைகள் முதலியன இங்குதான் மொத்தமாகவும், சில்லரையாகவும் பெரும் அளவுக்கு விற்கப்படுகின்றன.

இந்தக் கடைகள் எல்லாம் நேற்று மூடப்பட்டு, இந்தப் பகுதியே வெறிச்சோடிக் கிடந்தது!

இந்தக் கடையடைப்பு தமிழ்நாடு வர்த்தகக் கழகத்தின் வேண்டுகோளுக்கு ஏற்ப நடத்தப்பட்டது.

'அர்த்தால்' முழு வெற்றி பெற்றதாக கழகத்தலர் தெரிவித்தனர்.

சர்க்காரின் தொடர்ந்த பிடிவாதத்திற்கு, ஒற்றுமையுடனிருந்து வியாபாரிகள், தங்கள் கடைகளை அடைத்துத் தகுந்த பதில் அளித்திருக்கின்றனர்.

திருமழிசைக்கு அண்ணா வருகை

1—7—56 மாலை 6 மணியளவில், திருமழிசை பெருமாள் கோயில் அருகில், தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும்.

அண்ணா, தி. மு. கழகத் தலைமைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், டி. சண்முகம் எம். எல். ஏ., சி. வி. எம். அண்ணாமலை ஆகியோர் பேசுவர்.

வழக்கு ஒத்திவைப்பு

செஞ்சட்டைத் தலைவர் காண்அப்துல் கபார்கான் வழக்கு சூலை திங்கள் 11-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஆந்திரா-சென்னை எல்லைத் தகராறு

இப்போதைக்கு தீர்வு ஏற்படாது?

சென்னை, சூன் 26—

ஆந்திரா—சென்னை மாநிலங்களுக்கிடையேயுள்ள எல்லைத் தகராறினை பேச்சுவார்த்தை நடத்தியோ, மூன்றுமவரின் மத்தியஸ்தத்திற்கு விட்டோ தீர்வு காண வேண்டும் என்று சென்னை யோசனை தெரிவித்து எழுதியிருந்த கடிதத்திற்கு, ஆந்திர சர்க்கார் பதில் அனுப்பியிருப்பதாகவும், அந்தப் பதிலில் உள்ள விஷயங்கள் என்ன என்பதை இப்போது தெரிவிப்பதற்கு இல்லை என்றும் முதன் மந்திரி காமராசர் தெரிவித்திருக்கிறார்.

சென்னை சர்க்கார் தெரிவித்திருந்த யோசனையை ஏற்றுக் கொண்டு உடனடியாக ஆந்திர சர்க்கார் காரியமாற்ற முடியாத வகையில், தெலிங்கானா இணைந்த பெரிய ஆந்திர மாநிலம் அமைப்பதில் ஈடுபட்டிருப்பதாயும் முதன் மந்திரி காமராசர் தகவல் தந்திருக்கிறார்.

புயலை அறிவிக்கும் கருவி

ரூ. 14 இலட்சம் செலவில் இந்திய விமானங்களில் பொருத்தப்படும்

புதுடில்லி, சூன் 26—

விரைவிலேயே, இந்திய சர்க்காரின் பிரயாணப் போக்குவரத்து விமானங்களில், ரூ. 14 இலட்சம் செலவில், புயலை அறிவிக்கும் கருவி பொருத்தப்படுமெனத் தெரிகிறது.

இடியினால் விமானத்திற்கு சேதமேற்படாமல் தடுப்பதற்கு இந்தக் கருவிகள் உதவுமெனக் குறிப்பிடப்படுகிறது.

திருமணம்

29—6—56 காலை 7-30 மணியளவில், குடந்தை, பாணுதுறை பத்துக்கட்டுத் தெருவில், தோழர் ப. கோதண்டபாணி (குடந்தை வில்லான்)—தோழியர் சகுந்தலா திருமணம் நடைபெறும். தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள், 'தமிழர் திருமணம்' என்ற தலைப்பில், வாழ்த்துரை வழங்குவார்.

* * *

29—6—56 காலை 7 மணியளவில், மாயூரம் செங்கமேட்டுத் தெருவில், நகர தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் சா. மீனாட்சி சுந்தரம்—தோழியர் இராசலெட்சுமி திருமணம் திருமணம் தோழர் ப. உ. சண்முகம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, என். கிட்டப்பா வாழ்த்துரை வழங்குவர்.

வாக்காளர்கள் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யாறு தொகுதியில் சூலை 19-ந் தேதிவரையிலும், பாடியக்கிராமத்தில் 24-ந் தேதி வரையிலும் ஓமலூரில் 25-ந் தேதி வரையிலும் சிதம்பரத்தில் 17-ந் தேதி வரையிலும் அரிராம்பட்டினத்தில் 24-ந் தேதி வரையிலும் பட்டுக்கோட்டையில் 24-ந் தேதி வரையிலும் கரூரில் 14-ந் தேதி வரையிலும் குளித்தலையில் 14-ந் தேதி வரையிலும் உடுமலைப்பேட்டையில் 26-ந் தேதி வரையிலும் ஆட்சேபணைகளையும் கோரிக்கைகளையும் தாக்கல் செய்யலாம்.

இரண்டாம் திட்ட வெற்றிக்கு 'சாது'க்கள் ஒத்துழைப்பாம்!

ரூ. 15 கோடி வேண்டுமெனக் கோரிக்கை!

புதுடில்லி, சூன் 26—

இரண்டாம் திட்ட வெற்றிக்காக 'சாது'க்கள் பாடுபடப்போகின்றனராம்!

இதற்காக, 'பாரத் சாது சமாஜ்' ஒரு திட்டம் தீட்டியுள்ளதாம்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூ. 15 கோடி பணம் வேண்டுமென, டில்லி சர்க்காரை 'சமாஜ்' கேட்டுள்ளதாம்!

'சாது சமாஜ்', தேர்தலில் போட்டியிடாதாம்; எனினில், 'சாதுக்கள் அரசியலிலிருந்து விலகி நிற்க வேண்டும்' என்று தீர்மானித்துள்ளனராம்!

வரப்போகும் ஐந்தாண்டுகளில், சாதுக்கள் சுமார் 3,000 கோடி மணி நேர உழைப்பைத் தருவார்களாம்!

மக்கள் திட்டத்தில் அக்கறை கொள்ளுவதற்காக, சாதுக்கள் ஒரு பிரச்சார இயக்கம் துவக்குவார்களாம்!

இந்தத் தகவலை 'பாரத் சாது சமாஜ்' தலைவரான துக்தோஜி மகாராஜ் தெரிவித்திருக்கிறார்.

'மீரினர்' என்பது உண்மைதானும்!

சிங்கப்பூர், சூன் 24—

கோவாவுடன் வாணிபம் செய்வதற்கு இந்தியப் பேரரசினர் விதித்துள்ள கிபர்தனைகளை இவ்குள்ள இந்திய வியாபாரிகள் மீறிவிட்டனர் என்பது உண்மைதானென்றும், புதுலை, அதன் விளைவைக் கருதாமல் தெரியாத்தனமாகத் தான் அவ்வாறு செய்தார்களென்றும் சிங்கப்பூர் இந்திய வர்த்தக சங்கத் தலைவர் அசோமல் ஒப்புக் கொண்டாராம்.

கிளைக் கழகச் செயலாளர்களே—உங்கள் ஊரிலுள்ள கழகத் தோழர்கள், தங்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்து கொண்டார்களா — இல்லையெனில், அதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. மாடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியாராயண செட்டித் தெரு, [illegible] இரா. மாடுஞ்செழியன் எம்.ஏ.